# கலை பண்பாட்டுத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2017 – 2018

## பொருளடக்கம்


| வ. எண். | விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | துறையின் நோக்கம் | 2 |
| 3 | மண்டல கலை பண்பாட்டு மையங்கள் | 6 |
| 4 | மாவட்ட கலை மன்றங்கள் | 9 |
| 5 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் | 11 |
| 6 | தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் | 13 |
| 7 | கவின்கலை மற்றும் கட்டடக்கலை கல்வி நிறுவனங்கள் | 21 |
| 8 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 25 |
| 9 | ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கான நலத் திட்டங்கள் | 39 |
| 10 | தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் | 44 |
| 11 | 2016–2017 ஆம் ஆண்டில் கலை பண்பாட்டுத் துறையின் முக்கிய வளர்ச்சிப் பணிகள் | 54 |
| 12 | 2016–2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | 56 |
| 13 | 2016–2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலை விழாக்கள் | 63 |
| 14 | முடிவுரை | 69 |
| 15 | புகைப்படங்கள் | |

# கலை பண்பாட்டுத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2017–2018

**முன்னுரை**

**1.** கலையும் பண்பாடும் மனிதனை மனிதனாக அடையாளம் கண்டுணர அமைந்தவை. செதுக்கிய சிற்பங்களும், தீட்டிய ஓவியங்களும், எழுதிய காவியங்களும், ஒலித்த இசைக்கோவைகளும், நாடகங்களும், நாட்டியங்களும், நாட்டுப்புற நடனங்களும் கலை மற்றும் பண்பாட்டின் வெளிப்பாடு என்றால் அது மிகையில்லை.

இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றை வளர்த்திடவும், பண்பாட்டை வெளிப்படுத்தும் மரபு கலைகளான நிகழ்த்துக் கலைகளையும், நுண்கலைகளையும் இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லவும், இக்கலைகளின் வளர்ச்சிக்காக பல்வேறு கலைத்

திட்டங்களை ஒருங்கிணைத்து ஊக்குவிக்கவும், கலைகளையும், பண்பாட்டினையும் பாதுகாத்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காக "கலை பண்பாட்டுத் துறை" என்ற ஒரு தனித் துறை டிசம்பர் திங்கள் **1991** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

பொதுத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த, தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் மற்றும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு, கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வந்த, அரசு இசைப் பயிற்சி மையங்கள், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த, அரசு கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் அரCù˜ கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆகிய அனைத்தும் இத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டன.

**துறையின் நோக்கம்**

**1.1** தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் இசை ஒலியையும், நாத முழக்கத்தையும், செந்தமிழ் ஓசையையும்

ஒலிக்க செய்தல், நடனங்களும், நாடகங்களும், நாட்டுப்புற கலை வடிவங்களும் அழியாமல் பாதுகாத்தல், மக்களுக்கு பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்துதல், கலைஞர்களைப் போற்றி பேணிக்காத்தல், அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்குதல், அதன் மூலம் தமிழக பண்பாட்டுக் கூறுகளை பாதுகாத்து, இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லுதல் ஆகியவற்றினை முதன்மை நோக்கமாகக் கொண்டு, இத்துறை செயல்பட்டு வருகிறது.

**துறையின் செயல்பாடுகள்**

**1.2** இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள், ஓவியம், கட்டட மற்றும் சிற்பம் முதலான கலைகளை நிகழ்த்துக்கலைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் கவின்கலைக் கல்வி நிறுவனங்கள் வாயிலாக இளைய தலைமுறையினருக்கு பயிற்றுவித்தல், தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் மற்றும் கலைக்குழுக்களை ஊக்குவிக்கும் வண்ணம், துறையின் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் வழங்குதல், கிராமியக் கலைகளை அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு, இளைய

சமுதாயத்தினருக்கு கலைப்பயிற்சி அளித்தல், தமிழகத்தின் பண்பாட்டு கலைகளை வெளி மாநிலத்தவரும், வெளி நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், திறமைமிக்க கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக, அகவைக்கு ஏற்றவாறு மாவட்ட அளவில் கலை விருதுகள் வழங்குதல் மற்றும் மாநில அளவில் விருதுகள் வழங்குதல், நலிவுற்ற நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்களுக்கு, திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், தன்னார்வ கலை அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், கலைஞர்களை ஊக்குவித்து, அவர்களது வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்தல், கலை வடிவங்களை மீட்டுருவாக்கி அதனை தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுதல் ஆகிய கலைப் பணிகளை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

**1.3** இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் 7 மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக, துறையின் கலைத் திட்டங்களை மாவட்ட அளவில் பரவலாக்குதல், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம், 4 அரசு இசைக் கல்லூரிகள், 17 மாவட்ட

அரசு இசைப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றின் வாயிலாக இசை மற்றும் நிகழ்த்துக் கலைகளில் பயிற்சி அளித்தல், 2 அரசு கவின் கலைக் கல்லூரிகள், 1 அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி வாயிலாக நுண்கலைகளில் பயிற்சி அளித்தல், 40 சவகர் சிறுவர் மன்ற மையங்கள் வாயிலாக இளம் சிறார்களுக்கு கலைப்பயிற்சி அளித்தல், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக, மாவட்டக் கலை விருதுகள் வழங்குதல், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் வாயிலாக, ஓவிய – சிற்பக் க¬ô, காட்சி நடத்துதல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, தொன்மை வாய்ந்த கலைகளைப் போற்றிப்பாதுகாத்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்க கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்தல் மற்றும் விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையில் வாழும் õ«ò£Fè, கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளும், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் வாயிலாக, பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

வழங்குதல் போன்ற பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1.4** கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் தலைமையில் செயல்படும் இத்துறையில், **1** இணை இயக்குநர், **1** துணை இயக்குநர், **7** மண்டல உதவி இயக்குநர்கள், **1** கணக்கு அலுவலர், **1** செயல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் ஆணையருக்கு உதவியாக அரசின் பல்வேறு கலைப்பணித் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திடும் பொருட்டு, இத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

**மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்**

**1.5** தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க கலைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்லும் பொருட்டும், கலைப்பணிகளை ஒருங்கிணைத்து மாவட்டங்களில் செயல்படுத்தவும், காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய **7** இடங்களில் மண்டலக் கலை

பண்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**1.6** மாவட்ட அளவில் அரசின் கலை திட்டங்களை செயல்படுத்திடும் வகையில், உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்பட்டு வரும் மண்டல கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக, மாவட்டங்களில் கலை விழாக்கள் நடத்துதல், மாவட்ட அளவில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், செவ்வியல் கலைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், கலைப்போட்டிகள் நடத்துதல், கலைப்பயிற்சி அளித்தல், ஓவிய–சிற்ப க¬ô, காட்சி நடத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், ஜவகர் சிறுவர் மன்றங்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, பல்வேறு கலை மற்றும் கலாச்சார திட்டங்களை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் செயல்படுத்தி வருகின்றன.

**1.7** மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் தனித்தும், தமிழ்நாடு இயல்

இசை நாடக மன்றம், தென்னகப் பண்பாட்டு மையம், சுற்றுலாத் துறை மற்றும் அந்தந்த மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்தும், ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த மாவட்டத்தின் சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் வைகுண்ட ஏகாதசி விழா, கார்த்திகை தீப விழா, பாவை விழா, சாரல் விழா, சீர்காழி மூவர் விழா, கட்டபொம்மன் பிறந்தநாள் விழா, அருவித் திருவிழா, குமரித் திருவிழா, சதய விழா, ஆழித்தேர் விழா, தமிழிசை விழா, கோடை விழா, ஆடிப்பெருக்கு விழா, மாங்கனி விழா, மகாசிவராத்திரி விழா மற்றும் மதநல்லிணக்க விழா போன்ற கலை விழாக்களில் கலை நிகழ்ச்சிகள் வழங்கி வருகின்றன.

**1.8** கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய, புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் நிறுவிட, அரசாணை (நிலை) எண்.77, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.23.03.2017–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**மாவட்டக் கலை மன்றங்கள்**

**1.9** மாவட்டங்களில் உள்ள கலைஞர்களை அடையாளம் கண்டு உதவவும், தொன்மையான தமிழ் கலைகளை பேணிபாதுகாத்து, மேம்படுத்திடவும், கலைத் திறமையுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து, மாவட்ட அளவில் கலை விருதுகள் வழங்கிடவும், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**1.10 2002–2003** ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறன்படைத்த ஐந்து கலைஞர்களுக்கு, அவர்களது வயதிற்கும், கலைத் திறமைக்கும் ஏற்றவாறு, கலை விருதுகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண்.**56**, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.**16.3.2017** வாயிலாக, மாவட்டக் கலை மன்ற விருதுகளுக்கான தொகை, **2017–2018** ஆம் நிதியாண்டு முதல் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வயது பிரிவு | விருது | 2013–2014 முதல் (ரூ.) | 2017–2018 முதல் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 18 அகவை மற்றும் அதற்குட்பட்ட அகவைப் பிரிவினர் | கலை இளமணி | 2,000/– | 4,000/– |
| 2 | 19 முதல் 35 வரை உள்ள அகவைப் பிரிவினர் | கலை வளர்மணி | 3,000/– | 6,000/– |
| 3 | 36 முதல் 50 வரை உள்ள அகவைப் பிரிவினர் | கலைச்சுடர் மணி | 5,000/– | 10,000/– |
| 4 | 51 முதல் 60 வரை உள்ள அகவைப் பிரிவினர் | கலை நன்மணி | 7,500/– | 15,000/– |
| 5 | 61 அகவை மற்றும் அதற்கு மேற்பட்ட அகவைப் பிரிவினர் | கலை முதுமணி | 10,000/– | 20,000/– |
| மொத்தம் | | | 27,500/– | 55,000/– |

மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக, 2002–2003 ஆம் ஆண்டு முதல் கலைஞர்களுக்கு அடையாள

அட்டைகள் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன. அரசிடமிருந்து நிதியுதவி பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுதல் மற்றும் பயணச் சலுகை பெறுதல் ஆகியவற்றிற்கு இவ்வடையாள அட்டைகள் கலைஞர்களுக்கு பயனுடையதாக இருக்கின்றன.

## தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

**1.11** தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நோக்கத்திற்காகவும், அரசால் அடையாளம் காணப்பட்ட **100** பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளின் பல்வேறு கலை வடிவங்கள் அழியாமல் பாதுகாக்கவும், இளைய தலைமுறையினருக்கு நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சிகள் அளித்திடவும், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் **31.03.2017** வரை, **33,030** கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். **7,487** கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க ரூ.**1,29,23,112/–** நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## கலைக்கல்வி நிறுவனங்கள்

### இசைக்கல்வி பயிலகங்கள்

**1.12** "பாடுவோன் கருத்தை கேட்போன் பருக, எண்ணமும், ஓசையும் இசைவதே இசையாம்" என்ற நாமக்கல் கவிஞரின் கவிதைக்கு இணங்க, ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு சுரங்களும் சங்கீதமாக ஒலித்திட ஏற்படும் இசையானது, மனிதனின் உள்ளத்திற்கு அமைதியையும், இன்பத்தையும், மூளைக்கு சுறுசுறுப்பையும் அளிக்கிறது. தொன்மையான கலையான இசை மற்றும் நடனமும், நமது பண்பாட்டினையும், பாரம்பரியத்தினையும் இன்றளவும் பிரதிபலித்து வருகின்றன. தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம், அரசு இசைக் கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் ஆகியன, இளைய தலைமுறையினருக்கு இசையினை பயிற்றுவிக்கவும், திறன்படைத்த இளம் கலைஞர்களை புகழ்மிக்க இசைவல்லுநர்களாக உருவாக்கிட வாய்ப்புகள் வழங்கிடவும், தொன்மையான இசையின் மகத்துவத்தினை மாநிலம் முழுவதும் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் எடுத்துச் செல்லும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்**

**1.13 2013** ஆம் ஆண்டில் சட்டமன்ற பேரவை விதி **110–**இன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் அவர்களால் இசை, நடனம், ஓவியம் மற்றும் சிற்பத்தின் மகத்துவத்தை இளையதலைமுறையினருக்கு உணர்த்த வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகச் சட்டம், **2013** (Tamil Nadu Music and Fine Arts University Act, 2013) இயற்றப்பட்டு, **14.11.2013** முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வேந்தராகக் கொண்டு, தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் தற்காலிகமாக, சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

**1.14** தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தில், **2014–2015** ஆம் கல்வியாண்டு முதல், குரலிசை,

வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய கலைப் பிரிவுகளில் முதுகலை பட்டப் படிப்புகளும், டிஜிட்டல் போட்டோகிராபி மற்றும் காட்சிவழித் தொடர்புத் துறையில், முதுகலை பட்டயப் படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. 2016–2017 ஆம் கல்வியாண்டில், கூடுதலாக ஓவியம் மற்றும் காட்சி வழி தொடர்புத் துறையில், வார இறுதி நாட்கள் பயிற்சியாக மூன்றாண்டு முதுகலை பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

**1.15** கலை பண்பாட்டுத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் செயல்படும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் செயல்படும் அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் செயல்படும் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகள், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

**1.16** தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் சிறப்புடன் செயல்படவும், பல்கலைக் கழகத்தினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் பொருட்டும், அரசால் ஆட்சிமன்றக் குழு (சிண்டிகேட்), பாடத்திட்டக் குழு, கல்விக் குழு, நிதிக் குழு அமைக்கப்பட்டு, அதன் வாயிலாக, தொடர்ச்சியாக கூட்டங்கள் நடத்தப்பட்டு, கொள்கை முடிவுகள் அடிப்படையில் செயலாக்கம் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**1.17** பல்கலைக் கழகம் சிறப்பாக செயல்பட, **2016–2017** ஆம் ஆண்டில் ரூ.**2.03** கோடி நிதி நல்கையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. கணினிகள், மென்பொருள்கள், அறைகலன்கள், இசைக்கருவிகள் மற்றும் ஏற்கெனவே உள்ள பாடப்பிரிவுகள் மற்றும் புதிய பாடப்பிரிவுகளான எண்ணியல் நிழற்படக்கலை, காட்சி வழித் தொடர்பு மற்றும் வண்ணக்கலை ஆகியவற்றிற்கு, மின்னணு சாதனங்கள் வாங்குவதற்காக ஒருமுறை தொடராச் செலவினமாக, ரூ.**74.00** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**அரசு இசைக் கல்லூரி, சென்னை**

**1.18** சென்னை அரசு இசைக் கல்லூரியானது அடையாறு ஆற்றங்கரையில் அமைந்துள்ள "பிராடிகேசில்" என்னும் மிகவும் தொன்மையான கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சீரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், குரலிசையில் (முதுகலை இசைக் கலைமணி) ஈராண்டு முதுநிலை பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில், ஈராண்டு பட்டயப் படிப்பும் மற்றும் இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் நடத்தப்பட்டு வருகின்றன. 2014–2015 ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பிரிவுகளில், மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பும், மாலை நேரங்களிலும், வார விடுமுறை நாட்களிலும் விருப்பமுள்ள இல்லத்தரசிகளுக்காகவும், கூடுதல் பட்டம் பெற, விரும்பும் மாணவர்களுக்காகவும் குரலிசை, வீணை ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன.

**அரசு இசைக் கல்லூரி, மதுரை**

**1.19** இயற்கை எழில் சூழ்ந்த மதுரை, பசுமலையில் அரசு இசைக்கல்லூரி அமைந்துள்ளது. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில், மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. **2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை பாடப்பிரிவில் இளங்கலை பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

**அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்**

**1.20** கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் செயல்பட்டு வரும் அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில், மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில், ஓராண்டு பட்டயப்படிப்பும் நடத்தப்பட்டு வருகின்றன. **2014–2015** ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பாடப்பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

**அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

**1.21** கர்நாடக இசைக்கு பெருமை சேர்க்கும் வகையில், ஆண்டு தோறும் சத்குரு ஸ்ரீதியாகராஜர் ஆராதனை நடைபெறும் திருவையாறில், அரசு இசைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், குரலிசையில், மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பும், இரண்டாண்டு முதுகலை பட்ட மேற்படிப்பும் மற்றும் முனைவர் பட்ட ஆய்வும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**1.22** இசைக்கலையினை வளர்த்திட வேண்டும் என்ற நோக்கத்தில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு இசைக்கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் திங்கள் தோறும் ரூ.500/– வீதம், பத்து மாதங்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**மாலை நேர இசைக்கல்லூரி மையங்கள்**

**1.23** சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, அரசு இசைக் கல்லூரி வளாகத்தில், குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிலும், மதுரை மாலை நேர இசைக்கல்லூரியில், குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிலும், கோயம்புத்தூர் மாலை நேர இசைக்கல்லூரியில், குரலிசை, வீணை, வயலின் ஆகிய மூன்று பிரிவுகளிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்**

**1.24** இசையில் ஆர்வமிக்க இளவயதினரை ஊக்குவித்து, அவர்களது இசை ஆர்வத்தினை தூண்டும் வகையிலும், இசைக்கல்வியினை பரவலாக்கவும், மாணாக்கர்களைப் புகழ்மிக்க இசைக்கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடனும், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர்,

காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய 17 மாவட்டங்களில், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய கலைகளில், மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் திங்கள் தோறும் ரூ.400/– வீதம், 10 திங்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

1.25 திருவாரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு ரூ.75.00 இலட்சம் மதிப்பில் பொதுப்பணித்துறையால் கட்டப்பட்ட புதிய கட்டடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக, 8.5.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**கவின் கலை மற்றும் கட்டடக்கலை கல்வி நிறுவனங்கள்**

**1.26** புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசல் ஓவியங்களும், தஞ்சாவூர் ஓவியங்களும், மாமல்லபுரத்தின் சிற்பங்களும், தமிழகத்தின் புகழ் பெற்ற திருத்தலங்களில் உள்ள ஓவியங்களும், சிற்பங்களும் தமிழர்களின் தொன்மையான கலாச்சார பாரம்பரியத்தின் சிறப்பினை இன்றளவும் உலகிற்கு எடுத்துரைக்கின்றன. தமிழக அரசின் முத்திரை ஓவியத்தினையும், மெரினா கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலையினையும் வடிவமைத்த, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை அண்ணா நகர் முகப்பு வளைவு, சென்னை பல்கலைக் கழக நுழைவு வாயில் ஆகியவற்றினை வடிவமைத்த மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லுரி ஆகியவை மிகச் சிறந்த ஓவியர்களையும், சிற்பிகளையும் உருவாக்கியுள்ளது.

**அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை**

**1.27** புராதன கட்டடத்தில் செயல்படும் இந்திய அளவில் மிகவும் பழமையான கல்லூரிகளில் ஒன்றான,

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியானது, ஆங்கிலேயர்கள் காலத்தில் ஓவியப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, அரசு தொழிற்பயிற்சி கல்லூரியாகவும் (பாலிடெக்னிக்), பின்னர் அரசு கவின் கலைக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை(Sculpture), மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்பும், வண்ணக்கலை, சிற்பக்கலை, காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு, சுடுமண் வடிவமைப்பு மற்றும் துகிலியல் வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்**

**1.28** கோயில் நகரமான கும்பகோணத்தில் செயல்பட்டு வரும், அரசு கவின் கலைக் கல்லூரியில், காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை

(Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலை பட்டப்படிப்புகளும், இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

1.29 சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் 8.9.2016 முதல் 12.9.2016 வரை நடத்தப்பட்ட, ஓவிய–சிற்பக் கலைகாட்சியின் நிறைவு விழாவில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் சிறந்த கலைப்படைப்புகள் வழங்கிய கலைஞர்களுக்கு, ரூ.20,000/– வீதம், 10 மூத்த கலைஞர்களுக்கும், ரூ.10,000/– வீதம், 10 இளங்கலைஞர்களுக்கும் என மொத்தம் 20 கலைஞர்களுக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்திற்காக, தமிழக அரசால் ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

**அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்**

1.30 பல்லவர்களின் காலத்தில் துறைமுக நகராக விளங்கிய மாமல்லபுரம், குடைவரைக் கோயில்கள், மண்டபங்கள், ஒற்றைக்கல் கோயில்கள், கடற்கரை கோயில்கள் என கல்லெல்லாம் கலைபேசும்

பெருமையினையும், உளியின் ஓசை கேட்கும் சிற்ப கலையின் மகத்துவத்தினையும் உள்ளடக்கியதால்தான் "இந்திய சிற்ப கலையின் அருங்காட்சியகமாக" வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. 1984 ஆம் ஆண்டு மாமல்லபுரத்தின் சின்னங்களை உலகப் பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

1.31 இத்தகைய பெருமைமிக்க மாமல்லபுரத்தில் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியானது செயல்பட்டு வருகிறது. சிற்ப பயிற்சி மையமாகவும், சிற்பக் கல்லூரியாகவும் (பாலிடெக்னிக்) அதன் பின்னர், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியாகவும் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மரபு கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக்கலையில் பி.எப்.ஏ. (Bachelor of Fine Arts in Traditional Sculpture) மற்றும் மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலையில் பி.எப்.ஏ. (Bachelor of Fine Arts in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

**1.32** திருச்சிராப்பள்ளியில் காவிரிக் கரையின் ஓரத்தில் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியானது செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி, அரசு உதவிப் பெறும் கல்லூரியாகவும், கல்லூரி கல்வி இயக்ககத்தின் மூலம் நிதியுதவியும், கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில், நுண்கலைகளை வளர்க்கும் விதத்தில், பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு பட்டப் படிப்புகளும், மூன்றாண்டு இளங்கலைப் பட்டப் படிப்புகளும், இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகளும் மற்றும் முனைவர் பட்ட ஆய்வு படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில், மாணவ, மாணவியர்களின் இசைப்பயிற்சி, நடனப்பயிற்சிக்கு ஏற்ற வகையில் ஒலி, ஒளி நூலகம், ஒலி–ஒளி பதிவுக்கூடங்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

**1.33** மத்திய அரசின் கலாச்சாரத்துறையின் கீழ் செயல்படும் மத்திய சங்கீத நாடக அகாதமியின்

நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மையும், நீண்ட நெடிய பாரம்பரியமிக்க தமிழகக் கலைகளை போற்றிப் பாதுகாக்கவும், தமிழக அரசால், **1955** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பானது, இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், **1973** ஆம் ஆண்டில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. தமிழக அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம், தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலைவடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களை ஊக்குவித்தல், தமிழக பாரம்பரியக் கலைகளை இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணித் திட்டங்கள்

**1.34** தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் வாயிலாக, நலிந்த நிலையில் வாழும் õ«ò£Fè, கலைஞர்களுக்கு,

திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல், தமிழ்நாட்டின் பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்து, அதன் மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும், ஊக்கமும் அளித்தல், கலைத்துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்கு சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்கு **'கலைமாமணி'** என்ற மாநில விருது வழங்குதல் மற்றும் **"பாரதி", "எம்.எஸ்.சுப்புலட்சுமி", "பாலசரசுவதி "**ஆகியோர் பெயரில் அகில இந்திய அளவிலான விருதுகள் வழங்கி சிறப்பு செய்தல், தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகம், நாட்டிய–நாடகங்கள் உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நிதியுதவி வழங்குதல், கலைமேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் நிதியுதவி வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும் நோக்கில் பல்வேறு கலைவிழாக்கள் நடத்துதல், அயல் நாடுகளில் தமிழக

கலைகளை கொண்டு செல்லுதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலையம்சங்களை இளைய தலைமுறையினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல் ஆகிய கலைப்பணித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

**1.35** தங்களின் வாழ்க்கையே கலை என வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு, அகவை முதிர்வின் காரணமாக, வாய்ப்புகள் இன்றி நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும், ரூ.**1,000/–**ஆக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி, **1.4.2013** முதல், ரூ.**1,500/–**ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் மொத்தம் **13,563** நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.**12,000/–**த்திலிருந்து, ரூ.**60,000/–**ஆக, **2012** ஆம் ஆண்டு முதல் உயர்த்தி அரசால் ஆணையிடப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளின் அடிப்படையில், தற்போது நலிந்த

கலைஞர்களுக்கான நிதியுதவிக்கு கலைஞர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

**மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்.**

**1.36** புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவிற்கு பிறகு அவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு தொகை, தற்போது ரூ.6,000/–த்திலிருந்து, ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, மொத்தம் 430 மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு ரூ.19.80 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்**

**1.37** இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தவும், தமிழ் பண்பாட்டு மரபினையும், கலையினையும் பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தை சங்கீத நாடக அகாதமியின் நிதியினைக் கொண்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்தி

வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்திற்கு 82 வெளி மாநிலக் கலைக்குழுக்கள் வருகை புரிந்துள்ளனன. 85 தமிழகக் கலைக்குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வந்துள்ளன.

1.38 இதைத் தவிர, தமிழக அரசின் நிதியுதவியுடன் கலைப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், தமிழகத்தினை சார்ந்த 54 கலைக்குழுக்கள் வெளிமாநிலங்களிலும், வெளிமாநிலங்களைச் சேர்ந்த 2 கலைக்குழுக்கள் தமிழகத்திலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளன. இதன் வாயிலாக, தமிழகத்தினை சார்ந்த 940 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்

1.39 தமிழர்களும், அவர்களின் பண்பாட்டினை ஒட்டிய கலாச்சாரமும் உலகம் முழுவதும் பரவி உள்ளதாலும், தமிழர்கள் இல்லாத வெளிநாடுகள் இல்லை என்ற அளவில் தமிழர்கள் உலகம் முழுவதும் நிறைந்துள்ளனர் என்பதாலும், நமது தமிழ் பண்பாட்டினையும், கலைகளையும் வெளிநாடுகளில் உள்ள மக்கள் அறிந்து கொள்ளவும்,

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையிலும், அந்நாடுகளில் நடைபெறும் கலை கலாச்சார விழாக்களில், தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளான பரதநாட்டியம், நாட்டுப்புறக்கலைகள், பொம்மலாட்டம், இசை நிகழ்ச்சிகள் ஆகிய கலை நிகழ்ச்சிகள் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக வெளிநாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக ஓமன், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு 8 கலைக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதன் வாயிலாக, 67 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

**1.40** குரலிசை, கருவியிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய கலைகளில் திறமை மிக்க இளம் கலைஞர்களை ஊக்குவித்து, வாய்ப்புகள் வழங்கும் வகையில், தமிழகத்தின் பண்பாடு மற்றும் கலை வடிவங்களை போற்றி வளர்க்கும் உன்னத பணியினை மேற்கொள்ளும் தன்னார்வக் கலை நிறுவனங்கள் வாயிலாக, கலை நிகழ்ச்சிகள் நடத்திட

ரூ.5000/– முதல் ரூ.10000/– வரை நிதியுதவி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1941 இளங்கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்**

1.41 நாட்டுப்புறக் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில் இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் / ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு, ரூ.2,000/–மும், கலைக்குழுக்களுக்கு ரூ.6,000/–மும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 1625 கலைஞர்களும், 112 கலைக்குழுக்களும் பயனடைந்துள்ளனர்.

**புதிய நாடகங்கள் / நாட்டிய–நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

**1.42** நலிந்து வரும் நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள நாடகக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ் கலை, பண்பாடு, வீரம் மற்றும் தமிழ் இலக்கியம் ஆகியவற்றை மையக் கருத்தாகக் கொண்டு, வரலாறு / புராண / சமூக தமிழ் நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்திடவும், தமிழ் கலைகள், இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திடவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம், கலைக்குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை, **47** நாடகங்கள், **33** நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**கலை குறித்த அரிய நூல்கள் பதிப்பிப்பதற்கு நிதியுதவி வழங்குதல்**

**1.43** கலைகள் குறித்த அரிய நூல்களை பதிப்பித்து, வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை, **109** அரிய கலைகள் குறித்த புத்தகங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**கிராமியக் கலை, இசை நாடகக் கலையில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் இளைய தலைமுறையினர் கண்டுணர கலைகளை ஆவணப்படுத்துதல்**

**1.44** அழிந்து வரும் நிலையில் உள்ள தமிழக நாட்டுப்புறக் கலை வடிவங்களை போற்றிப் பாதுகாத்து, இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லவேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில், பொம்மலாட்டம், கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, இசை நாடகம் ஆகிய கலைகளில் இளைய தலைமுறையினருக்கு, அக்கலை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளித்து, மேடையேற்றம் செய்து, அதன் வாயிலாக இளைய தலைமுறையினரிடையே கலைகள் குறித்த விழிப்புணர்வு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**1.45 2016–2017** ஆம் ஆண்டில், திண்டுக்கல் நகரில், கரகம் கலையில், **25** இளைஞர்களுக்கும், தஞ்சாவூரில், பொய்க்கால் குதிரை கலையில் **25** இளைஞர்களுக்கும்,

திருவாரூரில், காவடி கலையில் **25** இளைஞர்களுக்கும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக கலைப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**1.46** ஆவணமாக்கும் திட்டத்தின் கீழ், அரிய கலைகளான பொம்மலாட்டம், தோற்பாவைக்கூத்து, தெருக்கூத்து மற்றும் இசை நாடகம் ஆகிய நான்கு கலை வடிவங்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் ஆவணமாக்கப்பட்டுள்ளன.

**கலைஞர்களுக்கு பயணக் கட்டண சலுகை**

**1.47** கலை நிகழ்ச்சிகள் நடத்திட, வெளியூர்களுக்கு, கலைஞர்கள் / கலைக்குழுக்கள் தொடர் வண்டியில் / அரசு பேருந்துகளில் சென்று வருவதற்காக, பயண கட்டண சலுகை, மன்றத்தால் வழங்கப்பட்டு வருகிறது. **2016–2017** ஆம் ஆண்டில், **513** குழுக்களைச் சார்ந்த **4894** கலைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலை விழாக்கள்**

**1.48** நமது தொன்மை மிக்க பழம்பெரும் கலைகளையும், பண்பாட்டினையும், இன்றைய இளம் தலைமுறையினர் கண்டுணரும் வண்ணம், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கிடவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, பல்வேறு கலைவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

**1.49** தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, சென்னை கிருஷ்ணகான சபாவில், **01.07.2016** அன்று, தோற்பாவைக்கூத்து கலை நிகழ்ச்சியும், குற்றாலம் சாரல் திருவிழாவில், **01.08.2016** மற்றும் **02.08.2016** ஆகிய இரண்டு நாட்களில், ஆண்டாள் திருக்கல்யாணம் நாட்டிய–நாடகம், தப்பாட்டம் ஆகிய இரண்டு கலை நிகழ்ச்சிகளும், சென்னை, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலில், **14.11.2016** அன்று, குழந்தைகள் தினவிழாவினை முன்னிட்டு, வளர்ந்து வரும் இளம் கலைஞர்களைக் கொண்டு, நாதஸ்வரம், தேவாரம், மாண்டலின், குரலிசை, புல்லாங்குழல் இசை ஆகிய நிகழ்ச்சிகளும், **05.12.2016** அன்று திருநெல்வேலி

மாவட்டம், வள்ளியூர் ஸ்ரீபொத்தையில், ஸ்ரீமுத்துகிருஷ்ண சுவாமி அவர்களின் குருபூஜை மற்றும் தேர்த்திருவிழாவின் போது, இசை நிகழ்ச்சியும், சென்னை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில், **14.01.2017** முதல் **16.01.2017** வரை, புதிய நாட்டிய நாடகங்கள் மேடையேற்றமும், **30.01.2017** மற்றும் **31.01.2017** ஆகிய நாட்களில், சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில், கலை பண்பாட்டுத்துறையால் நடத்தப்பெற்ற "சென்னையில் இசைவிழா" நிகழ்ச்சியில், குரலிசை மற்றும் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மேற்காண் கலை விழாக்களின் வாயிலாக, **500**–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபெற்று பயன்பெற்றனர்.

**1.50** தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, தமிழகத்திற்கு வெளியே நடைபெற்ற இமாச்சல பிரதேச மாநிலம் குல்லுவில், **16.10.2016** மற்றும் **17.10.2016** ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற, குல்லு தசரா விழாவில் தமிழக கிராமிய கலைநிகழ்ச்சிகளும், ஒடிசா மாநிலம், மெதினிபூரில், **24.11.2016** அன்று நடைபெற்ற "உட்கல் பங்கா உட்சவ்" விழாவில் கலை நிகழ்ச்சிகளும், கர்நாடக மாநிலம், பெங்களூருவில் நடைபெற்ற தாத்து பன்னாட்டு பொம்மலாட்ட கலைவிழா – **2017**ல், **5.1.2017** மற்றும் **8.1.2017** ஆகிய நாட்களில்

பாகவதமேளா மற்றும் கட்ட பொம்மலாட்ட கலை நிகழ்ச்சிகளும், பெங்களூருவில், **24.02.2017** அன்று மகாசிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், கிராமியப் பாடல்கள் மற்றும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இக்கலை விழாக்களின் வாயிலாக, **92** கலைஞர்கள் பயன்பெற்றனர்.

**1.51** பல்வேறு மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வரும் கலைஞர்கள் சலுகை கட்டணத்தில் தங்குவதற்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் விடுதிகள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் உள்ள ஆவணப்படங்களை காட்சிப்படுத்திட சிறிய திரையரங்கம், கலை நிகழ்ச்சிகள், கலைப்போட்டிகள், கருத்தரங்குகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை நடத்திட குளிரூட்டும் வசதி செய்யப்பட்ட சிறிய அரங்கம், முனைவர் ருக்மணி அருண்டேல் அவர்களின் பெயரில் உள்ள திறந்த வெளி கலையரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடத்திட ஒலி–ஒளி அமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைஞர்களுக்காக ஏற்படுத்தியுள்ளது.

## ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கான நலத் திட்டங்கள்

**1.52** தமிழர்களின் பாரம்பரியக் காட்சிக் கலைகளான ஓவியக்கலை, சிற்பக்கலை, பதிப்போவியக்கலை ஆகியன நமது தொன்மையான தமிழ் பண்பாட்டினையும், பாரம்பரியத்தினையும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல் உலகிற்கே எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளன. ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் திறமைகளை கண்டறிந்து ஊக்குவிக்கவும், பாதுகாக்கவும் அவற்றினை உலகிற்கு தெரியப்படுத்துவதே இத்துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

## "கலைச்செம்மல்" விருது வழங்கும் திட்டம்

**1.53** ஓவிய, சிற்பக் கலையில், மரபுவழி மற்றும் புதுப்பாணி கலைப் பிரிவுகளில், சிறந்த சாதனைகள் புரிந்தவர்களாகவும், கலைகளை வளர்ப்பவர்களாகவும், இளைய தலைமுறையினரிடையே கலைகளை கொண்டு செல்பவர்களாகவும் உள்ள கலைஞர்களை பாராட்டும் வகையில் "கலைச்செம்மல்" விருதுகள் வழங்கப்படுகின்றன.

‘‘கலைச்செம்மல்’’ விருது பெறும் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகையினை, 2016ஆம் ஆண்டில் ரூ.20,000/–லிருந்து, ரூ.50,000/–ஆக அரசு உயர்த்தியுள்ளது. இதுவரை, மரபுவழிப் பிரிவில், 16 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில், 47 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில், 3.5.2017 அன்று நடைபெற்ற, மாநில அளவிலான மரபுவழி மற்றும் நவீனபாணி கலைக்காட்சியின் தொடக்க விழாவில், தமிழக அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவால் கலைச்செம்மல் விருது,° ªîK¾ ªêŒòŠð†ì 7 கலைஞர்களுக்கு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால், தலா ரூ.50,000/–வீதம் ரொக்கப் பரிசும், செப்புப் பட்டயமும் வழங்கப்பட்டது.

## மாநில அளவில் மரபுவழி / நவீனபாணி பிரிவுகளில் ஓவிய – சிற்பக் கலைக்காட்சி நடத்துதல் மற்றும் விருது வழங்கும் திட்டம்

1.54 ஓவிய, சிற்பக் கலைகளை வளர்க்கவும், இக்கலைகளில் ஈடுபாடுள்ள கலைஞர்களின் திறமைகளை

மேம்படுத்தவும், மாநில அளவில் மரபுவழி / நவீனபாணி பிரிவில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து கலை படைப்புகள் பெறப்படுகின்றன. அவற்றிலிருந்து, அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவால், தெரிவு செய்யப்பட்ட கலைப் படைப்புகள் சென்னையில் காட்சிப்படுத்தப்படுகின்றன. 20 மூத்த கலைஞர்களுக்கு (30 வயதுக்கு மேற்பட்ட) தலா ரூ.9,000/– வீதமும், 20 இளங்கலைஞர்களுக்கு (30 வயதுக்குட்பட்ட) தலா ரூ.3,500/– வீதமும், விருதுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில், 3.5.2017 அன்று நடைபெற்ற மாநில அளவிலான மரபுவழி மற்றும் நவீனபாணி கலைக்காட்சியின் தொடக்க விழாவில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால், சிறந்த கலைப்படைப்புகள் வழங்கிய 20 மூத்தக் கலைஞர்களுக்கு தலா ரூ.9,000/–வீதமும், 20 இளங்கலைஞர்களுக்கு தலா ரூ.3,500/–வீதமும், மொத்தம் ரூ.2.50 இலட்சத்திற்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

**2016–2017** ஆம் நிதியாண்டில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி நடத்திடவும், கலைஞர்களுக்கு உயர்த்தப்பட்ட விருதுத் தொகையினை வழங்கிடவும், ரூ.**10.00** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தனிநபர் கலைக்காட்சி (**One man Show**) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (**Group Show**) நடத்திட கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்**

**1.55** திறமை படைத்த மற்றும் தலைசிறந்த தமிழக ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களால் உருவாக்கப்பட்ட கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகள் நடத்துவதை ஊக்குவிக்க, தனிநபர் கலைக்காட்சி நடத்தும் கலைஞர்களுக்கு (One man Show) தலா ரூ.**7,500/–** வீதமும், கலைஞர்கள் குழுவாக சேர்ந்து நடத்தும் கூட்டுக் கலைக்காட்சிக்கு (Group Show) குழு ஒன்றிற்கு ரூ.**15,000/–** வீதமும், திறமைமிக்க கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், வறிய நிலையில் உள்ள ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தி கலைக் காட்சி நடத்திட, ஒரு பாதையினை அமைத்துக் கொடுக்கிறது. தனி நபர் கலைக்காட்சி மற்றும் கூட்டுக்

கலைக்காட்சி நடத்திட, ஆண்டு தோறும் ரூ.60,000/– ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## கவின்கலை பயிலும் மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்

1.56 சென்னை மற்றும் கும்பகோணத்தில் செயல்படும், அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில், முதுகவின் கலையில் இறுதியாண்டு பயிலும், அதிக மதிப்பெண் பெற்று முதலிடம் பெறும், சிறந்த மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.5,000/– வீதமும், அதேபோல, இளங்கவின் கலையில் இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.3,000/– வீதமும், படிப்புதவித் தொகைகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 628 இளங்கலை மாணவ, மாணவிகளும், 96 முதுகலை மாணவ, மாணவிகளும் பயனடைந்துள்ளனர்.

1.57 ஒவ்வொரு ஆண்டும், சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் 10 சிறந்த மாணாக்கர்களுக்கு தலா ரூ.3,000/–வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும், 4 சிறந்த

மாணாக்கர்களுக்கு தலா ரூ.5,000/—வீதமும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. அதேபோன்று, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் 10 சிறந்த மாணாக்கர்களுக்கு தலா ரூ.3,000/—வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் 2 சிறந்த மாணாக்கர்களுக்கு தலா ரூ.5,000/—வீதமும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும், சுமார் 26 தலைசிறந்த மாணாக்கர்கள் பயன் பெறுவர். ஒவ்வொரு ஆண்டும், ரூ.90,000/— ஒதுக்கீடு செய்யப்பட்டு, படிப்புதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

1.58 மைய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தேசிய சிறுவர் மன்றத்தின் நோக்கங்களை மாநில அளவில் செயல்படுத்திட, தமிழ்நாடு மாநில சவகர் சிறுவர் மன்றம் 1979ல் தோற்றுவிக்கப்பட்டது. ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு பொதுக்கல்வியுடன் அடிப்படைக் கலைக் கல்வி வழங்குவதையும், சிறார்களிடம் மறைந்து கிடக்கும் கலைத்திறமைகளை வெளிக்கொணர்ந்து, வாய்ப்புகள் வழங்கி,

அதன் மூலம் சிறார்களின் தனித்திறமையை கண்டுணரச் செய்து, கலையால் அவர்களை நல்வழிபடுத்துதலை, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது மாநிலம் முழுவதும் 40 இடங்களில் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்கள், ஊரக மையங்கள் என செயல்பட்டு பயிற்சிகளை அளித்து வருகின்றன.

**மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள்**

**1.59** சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோயில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருட்டிணகிரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 24 மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன.

**ஜவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்**

**1.60** பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை (டாக்டர் எம்.ஜி.ஆர் காது கேளாதோர் பள்ளி, இராமாபுரம்), மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம்,

திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய 10 இடங்களில் ஜவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள்

**1.61** ஊரகப் பகுதிகளில் பின்தங்கியுள்ள சிறார்களின் கலைத் திறமைகளின் மேம்பாட்டிற்காக, புதுக்கோட்டை மாவட்டம் பொன்புதுப்பட்டி மற்றும் மதுரை எல்லீஸ் நகர் ஆகிய இரண்டு இடங்களில் ஜவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் செயல்படுகின்றன.

## சென்னையில் செயல்படும் ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள்

**1.62** சென்னையில், மயிலாப்பூர், வியாசர்பாடி–கிருஷ்ணமூர்த்தி நகர், வில்லிவாக்கம், சேலையூர், மேற்கு தாம்பரம் ஆகிய ஐந்து இடங்களில், ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## ஜவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர பயிற்சிகள்

**1.63** குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா,

கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு(பேண்ட்ஸ்), தையல், ஓவியம்–வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய 20 கலைகளில், சென்னையில் 16 வகையான கலைகளிலும், மாவட்டங்களில் 4 வகையான கலைகளிலும் பகுதி நேரக்கலைப் பயிற்சி, சிறார்களுக்கு வழங்கப்படுகிறது.

**பயிற்சித் திட்டங்கள்**

**மாவட்ட அளவில் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்**

**1.64** கோடை விடுமுறையில் மாணவர்கள் பயனுள்ள வகையில் கலைப் பயிற்சிகளை மேற்கொள்ள, மாவட்டம் ஒன்றிற்கு, ரூ.10,000/–வீதம், 32 மாவட்டங்களில் கலைப்பயிற்சி அளித்திட, 2016–2017ஆம் ஆண்டில் ரூ.3.20 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, 24.04.2016 முதல் 12.05.2016 வரை கோடைகால கலைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதன் மூலம், 4100 மாணாக்கர்கள் பயன்பெற்றனர்.

2017–2018 ஆம் ஆண்டில் கோடை விடுமுறையில் மாவட்ட அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாம், தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் நடத்திட, ரூ.3.20 இலட்சம்

நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, **21.4.2017** முதல் **14.5.2017** வரை கோடைக்கால கலைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதன் மூலம், **5000**–த்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பயன் பெற்றனர்.

**மாநில அளவிலான கோடைக்கால முகாம்**

**1.65** கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறையில், **21.5.2016** முதல் **29.5.2016** வரை நடைபெற்ற மாநில அளவிலான கோடைக்கால கலைப் பயிற்சி முகாமில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த **113** சிறார்களுக்கு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டன.

இந்த ஆண்டு மாநில அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாம், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் **18.5.2017** முதல் **26.5.2017** வரை நடைபெற்றது. இம்முகாமில் **110** குழந்தைகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

**மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம்**

**1.66** திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை சண்முகா தொழில்நுட்ப அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், **24.9.2016** முதல் **2.10.2016** முடிய தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த **100** மாணவர்களுக்கு, சுடுமண் சுதை சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், துணி அச்சு பதித்தல், கைவினை மற்றும் மெழுகுவர்த்தி செய்தல் ஆகிய கலைகளில் மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

**மாநில அளவிலான குளிர்கால முகாம்**

**1.67** இளம் சிறார்களிடையே கலைத் திறனை மேம்படுத்திட, சேலம் மாவட்டம், மண்டல கலை பண்பாட்டு மைய வளாகத்தில், **24.12.2016** முதல் **1.1.2017** வரை நடைபெற்ற மாநில அளவிலான குளிர்கால கலைப்பயிற்சி முகாமில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த **119** சிறார்களுக்கு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, கோல்கால் ஆட்டம், தப்பாட்டம், சிலம்பம் மற்றும் யோகா ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டன.

## மாவட்ட / மாநில அளவிலான கலைப்போட்டிகள்

**1.68** இளம் சிறார்களிடையே கலை ஆர்வத்தை மேம்படுத்திட, குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில், **5–8, 9–12, 13–16** ஆகிய வயது பிரிவுகளில், மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட அளவில் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**1.69** மாவட்ட அளவிலான கலைப்போட்டிகளில், வெற்றி பெற்ற **9–12, 13–16** ஆகிய வயது பிரிவு சிறார்கள், மாநில அளவிலான கலைப் போட்டிகளில் பங்கு பெற்றனர். மாவட்ட அளவில் பரிசு வென்ற **235** சிறார்கள் பங்கு கொண்ட மாநில அளவிலான கலைப் போட்டிகள், **28.5.2017** அன்று மதுரையில் உள்ள செவன்த் டே அட்வென்டிஸ்ட் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. போட்டியில் முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.**10,000/–**வீதமும், இரண்டாவது பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.**7,500/–**வீதமும், மூன்றாவது பரிசு பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசாக ரூ.**5,000/–**வீதமும்,

மொத்தம் **24** மாணவர்களுக்கு, ரூ.**1,80,000/**—த்திற்கு பரிசுத் தொகைகளும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்றத்தின் பங்கு**

**1.70** பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் **127**—வது பிறந்த நாளினை முன்னிட்டு, குழந்தைகள் தினவிழாக் கொண்டாட்டங்கள், **14.11.2016** முதல் **16.11.2016** வரை, புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் நடைபெற்றது. இவ்விழா, இளம் சிறார்களிடையே தேசிய ஒருமைப்பாட்டு உணர்வினை வலியுறுத்தும் வகையில், அனைத்து மாநில சிறார்களின் கலை வடிவங்கள் இடம் பெறும் வகையிலும் நடைபெற்றது. இவ்விழாவில், தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று தமிழகத்தில் செயல்படும் **21** ஜவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து **63** மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, தமிழகத்தின் கலைகளை வெளிப்படுத்தும், பரதநாட்டியம், கரகாட்டம், காவடியாட்டம் ஆகிய நடனங்களை ஆடி பாராட்டு பெற்றனர். குஜராத் மாநிலம், அகமதாபாத் நகரில், **24.3.2017** முதல் **26.3.2017** வரை நடைபெற்ற இளையோருக்கான தேசிய சுற்றுச்

சூழல் மாநாட்டில், தமிழகத்திலிருந்து 6 சவகர் சிறுவர் மன்ற மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

1.71 மாநில அளவிலான பாலஸ்ரீ விருதிற்கான தெரிவின் அடிப்படையில், தமிழகத்தினை சார்ந்த 61 மாணவர்கள், 3.5.2016 மற்றும் 4.5.2016 ஆகிய இரு நாட்களில், புதுதில்லி, தேசிய சிறுவர் மன்றத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான பாலஸ்ரீ தெரிவில் கலந்து கொண்டனர். தமிழகத்தின் சார்பில் கலந்து கொண்ட அனைத்து மாணாக்கர்களுக்கும், தேசிய அளவிலான போட்டியில் பங்குபெற்றமைக்கான சான்றிதழ் மற்றும் தலா ரூ.5,000/-ம், ஒட்டுமொத்தமாக 61 மாணாக்கர்களுக்கும், ரூ.3,05,000/- புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் வழங்கப்பட்டது.

**தேசிய பாலஸ்ரீ விருது**

1.72 2015 ஆம் ஆண்டிற்கான தேசிய பாலஸ்ரீ விருதினை தமிழகத்தினைச் சேர்ந்த 17 மாணவ, மாணவிகள், மேடைக் கலை (Creative Performance – Dance, Vocal Music, Percussion / Instrumental Music), படைப்புக் கலை (Creative Art – Painting, Craft, Sculpture, Visual Art), அறிவியல் கலை

(Creative Scientific Innovations – Model Making, Project Making, Problem Solving, Scientific Innovation), எழுத்துக் கலை (Creative Writing – Prose, Poem, Story, Dialogue and Play) ஆகிய நான்கு வகையான முதன்மைக் கலைகளை உள்ளடக்கிய 16 வகை கலைகளில் நடைபெற்ற போட்டிகளில், 11 வகை கலைகளில் தெரிவு பெற்றுள்ளனர். விருதாளர்கள் அனைவரும், வெகுவிரைவில், புதுதில்லி விஞ்ஞான் பவனில் நடைபெறவுள்ள விழாவில், மைய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து, தேசிய பாலஸ்ரீ விருதினையும், ரூ.15,000/– மதிப்புள்ள கிஸான் விகாஸ் பத்திரத்தினையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர். அகில இந்திய அளவில் அறிவிக்கப்பட்ட 82 விருதாளர்களில், 17 விருதாளர்கள் தமிழகத்தினை சார்ந்தவர்கள் என்பது தமிழகத்திற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

1.73 2013 ஆம் ஆண்டிற்கான “தேசிய பாலஸ்ரீ” விருதிற்கு, தமிழகத்தினை சேர்ந்த 7 மாணாக்கர்கள் தெரிவு செய்யப்பட்டு, மத்திய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து

“தேசிய பாலஸ்ரீ” விருதினையும், ரூ.15,000/– மதிப்புள்ள கிஸான் விகாஸ் பத்திரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றனர். சென்னை அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் 3.5.2017 அன்று நடைபெற்ற மாநில அளவிலான மரபுவழி மற்றும் நவீனபாணி கலைக்காட்சியின் தொடக்க விழாவில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால், “தேசிய பாலஸ்ரீ” விருது பெற்ற மேற்குறித்த 7 மாணக்கர்களுக்கும், தலா ரூ.15,000/–க்கான ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

## 2016–2017 ஆம் ஆண்டில் கலை பண்பாட்டுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய வளர்ச்சிப் பணிகள்

### 1.74 மாவட்ட அளவில் கலை விருதுகள் வழங்குதல்

1. கோயம்புத்தூர் மாவட்டத்தில், மாவட்ட கலை மன்றம் வாயிலாக, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட கலை மன்ற விருதுகள், 29.6.2016 அன்று 10 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

2. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக, 2012–2013, 2013–2014, மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட கலை மன்ற விருதுகள், 60 கலைஞர்களுக்கு, 15.08.2016 அன்று வழங்கப்பட்டன.

3. மதுரை மாவட்டத்தில், மாவட்ட கலை மன்றம் வாயிலாக, 2012–2013, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட கலை மன்ற விருதுகள், 20 கலைஞர்களுக்கு 20.12.2016 அன்று வழங்கப்பட்டன.

4. திருப்பூர் மாவட்டத்தில், மாவட்ட கலை மன்றம் வாயிலாக, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட கலை மன்ற விருதுகள், 26.1.2017 அன்று 10 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

5. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மாவட்ட கலை மன்றம் வாயிலாக, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட கலை மன்ற விருதுகள், 10.3.2017 அன்று 10 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

6. சிவகங்கை மாவட்டத்தில், மாவட்ட கலை மன்றம் வாயிலாக, 2012–2013, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட கலை மன்ற விருதுகள், 25.3.2017 அன்று 20 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

**1.75 2016–2017 ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் / மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

1. 2016–2017ஆம் நிதியாண்டில், சட்டமன்றப் பேரவையில், விதி 110–ன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும்

திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கி, கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, புதிதாக மண்டல கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென, ரூ.22.25 இலட்சம் தொடரும் செலவினமாகவும், ரூ.12.75 இலட்சம் தொடராச் செலவினமாகவும் அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

2. 2016–2017ஆம் நிதியாண்டில், சட்டமன்றப் பேரவையில், விதி 110–ன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மிகப்பழமையான சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பழுதடைந்த வகுப்பறைகளை ரூ.1.40 கோடி செலவில் புதுப்பிக்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. 2016–2017 ஆம் நிதியாண்டில், கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/– வீதம் நிதியுதவி வழங்கிட, ரூ.37.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 01.03.2017

அன்று நடைபெற்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் 500 நலிந்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 1.11.2016 முதல் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

4. இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை மற்றும் கிராமியக்கலை ஆகிய கலைகள் இடம்பெறத்தக்க வகையில், "வானவில்" என்ற கலை மற்றும் இசை விழாவினை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நடத்திட, ரூ.15.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னை, மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் மேற்குறித்த கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

5. மார்ச் 27 அன்று கொண்டாடப்படும் உலக நாடக தினத்தினை முன்னிட்டு, நாடகக்கலை விழாவினை நடத்திட, ரூ.15.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, சென்னை, மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் நாடகக் கலை விழாக்கள் நடத்தப்பட்டன.

6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்கு, ரூ.3.65 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, எல்காட் நிறுவனத்தின் வாயிலாக, கணினிகள் மற்றும் சாதனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

7. பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படும், கலை பண்பாட்டுத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு, ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் தொகையினை, ரூ.25.00 இலட்சத்திலிருந்து ரூ.1.00 கோடியாக உயர்த்தப்பட்டது. அதன் அடிப்படையில், பொதுப்பணித்துறைக்கு மேற்குறித்த தொகை வழங்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

8. 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு புதிதாக கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்க, ரூ.8.50 இலட்சமும், சென்னை கலை பண்பாட்டு

இயக்கக அலுவலகம், **6** மண்டல கலை பண்பாட்டு மைய அலுவலகங்கள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றிக்கு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க **ரூ.8.00** இலட்சமும், ஆக மொத்தம் **ரூ.16.50** இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஜெராக்ஸ் இயந்திரங்களும், கணினிகளும் வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.

9. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் **17** மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு, இசைக்கருவிகள் வாங்குவதற்கும் மற்றும் பழுதடைந்த இசைக்கருவிகளை பழுதுநீக்கம் செய்வதற்கும் தொடராச் செலவினமாக **ரூ.18.50** இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய இசைக்கருவிகள் வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தில் பயிற்சி பெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு பயிற்சி பொருட்கள் வாங்குவதற்கு, ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பயிற்சிப் பொருட்கள் வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

11. 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளிலும், 6 மண்டலக் கலை பண்பாட்டு மைய அலுவலகங்களிலும், 23 பெருக்குநர் – துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்தி தொகுப்பூதிய அடிப்படையில் வெளிமுகமை மூலம் நிரப்பிட, ரூ.16.56 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது. 23 பெருக்குநர் – துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் வெளிமுகமை வாயிலாக நிரப்பப்பட்டுள்ளன.

12. 4 தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், 2 அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பணிபுரியும், 43 ஒப்பந்த ஆசிரியர்களின் தொகுப்பூதியத்தினை,

ரூ.6000/–த்திலிருந்து, ரூ.15,000/–ஆக உயர்த்தி வழங்கிட, ரூ. 38.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், உயர்த்தப்பட்ட வீதத்தில் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

13. கலை பண்பாட்டு இயக்ககத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தில் உள்ள கூட்டரங்கத்திற்கு, கட்டமைப்பு வசதிகள், ஒலி / ஒளி வசதிகள், குளிர்சாதனம் மற்றும் இருக்கை வசதிகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள, ரூ.20.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

14. திருவண்ணாமலை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு, தொடராச் செலவினமாக, ரூ.85.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 8.5.2017 அன்று, காணொலி காட்சி வாயிலாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

**1.76 2016–2017 ஆம் ஆண்டில் தமிழகத்தில் / அயல் மாநிலங்களில் / அயல்நாடுகளில் நடத்தப்பட்ட கலை விழாக்கள்**

1. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் **30.07.2016** முதல் **05.08.2016** முடிய 7 நாட்கள் நடைபெற்ற குற்றால சாரல் திருவிழாவில், கலை நிகழ்ச்சிகள் நடத்த ரூ.**2.00** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2. காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் **12** ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் சங்கு தீர்த்த புஷ்கர மேளா விழாவில், **01.08.2016** மற்றும் **02.08.2016** ஆகிய **2** நாட்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ரூ.**5.00** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3. ‘‘திருவண்ணாமலை கார்த்திகை தீப விழா’’ நிகழ்ச்சியில், **3.12.2016, 4.12.2016** மற்றும் **17.12.2016** ஆகிய நாட்களில் ரூ.**0.50** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

4. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, 05.01.2017 முதல் 07.01.2017 வரை மூன்று நாட்கள் இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்த ரூ.2.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

5. விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆண்டாள் கோயிலில் நடைபெற்ற பாவை விழாவில், 18.1.2017 அன்று, ரூ.0.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

6. நீலகிரி மாவட்டம், ஊட்டியில், 15.1.2017 மற்றும் 16.1.2017 ஆகிய நாட்களில் நடைபெற்ற நீலகிரி தேயிலை மற்றும் சுற்றுலா விழாவில், ரூ.1.00 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

7. தமிழில் கீர்த்தனைகளை இயற்றிய மாரிமுத்தாப்பிள்ளை, முத்து தாண்டவர், அருணாச்சல கவிராயர் ஆகிய தமிழிசை மூவர்களுக்கு இசை அஞ்சலி செய்யும் விதமாக,

நாகப்பட்டினம், சீர்காழியில் 26.03.2017 முதல் 28.03.2017 வரை "சீர்காழி தமிழிசை மூவர் விழா" நடத்தப்பட்டது. இவ்விழாவினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

8. சென்னையில் இசைவிழா நிகழ்ச்சிகள் 10 நாட்களுக்கு நடத்த ரூ.8.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. இசை, நடனம், நடன – நாடகம் மற்றும் கருவி இசை ஆகியவற்றை 600–க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் நிகழ்த்தினர். மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு அரசு இசைக்கல்லூரிகள், திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக் கழகம், 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்

வாயிலாக, **2** கலைக்குழுக்களின் இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன.

**9.** இமாச்சல பிரதேசம் குல்லு தசரா விழாவில், **16.10.2016** மற்றும் **17.10.2016** ஆகிய நாட்களில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளை நடத்தியது. தமிழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி சிறப்பாக இருந்தமையால், இமாச்சல பிரதேச மாநில முதல்வரால் தமிழகத்தினை சார்ந்த குழுவினர் பாராட்டப்பட்டனர். இந்நிகழ்ச்சிகளுக்கு, ரூ.**4.63** இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

**10.** ஒடிசா மாநிலம், பாலசூர் மாவட்டத்தில் மெதினிபூரில் நடைபெற்ற "உட்கல் பங்கா உட்சவ்" விழாவில், **24.11.2016** அன்று, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, கலை நிகழ்ச்சிகள் நடத்த ரூ.**3.00** இலட்சம் செலவிடப்பட்டது.

11. கர்நாடக மாநிலம், பெங்களூருவில் நடைபெற்ற தாத்து பன்னாட்டு பொம்மலாட்ட கலைவிழாவில், 5.1.2017 மற்றும் 8.1.2017 ஆகிய நாட்களில் பாகவதமேளா மற்றும் கட்ட பொம்மலாட்ட கலை நிகழ்ச்சிகள் ரூ.1.50 இலட்சத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நடத்தப்பட்டன.

12. கர்நாடக மாநிலம், பெங்களூருவில், 24.02.2017 அன்று மகாசிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு கிராமியப் பாடல்கள் மற்றும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் ரூ.1.25 இலட்சம் செலவில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நடத்தப்பட்டது.

13. அயல்நாடுகளுக்கிடையேயான கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ், 17.09.2016 முதல் 30.09.2016 வரை, தமிழக பொம்மலாட்ட கலைக்குழு, பிரான்ஸ் நாட்டில் நடத்தப்பட்ட “நமஸ்தே பிரான்ஸ் கலைவிழாவில்’’ பாரீஸ், லியாண், ஃப்ளர்மென் ஃப்ரெட், ஸ்ட்ராஸ்பர்க், மாண்ட்பெலியர், அவிஞ்சான் ஆகிய இடங்களில் பொம்மலாட்ட

கலை நிகழ்ச்சிகள் ரூ.11.00 இலட்சம் செலவில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நடத்தப்பட்டன.

14. தனியார் கலை அமைப்புகளை ஊக்குவிக்கும் விதமாக, திருவையாறு தமிழிசை மன்றத்தின் மூலம் நடத்தப்பட்ட தமிழ் இசை விழா, தஞ்சாவூர் காவேரி அன்னை கலை மன்றத்தின் சார்பில் நடத்தப்பட்ட நாடகக் கலைவிழா, தஞ்சாவூர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட தென்னிந்திய மக்கள் நாடகக் கலைவிழா, காஞ்சிபுரம் கட்டை கூத்து சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட கட்டைக் கூத்து கலை நிகழ்ச்சிகள், லக்ஷ்மன் ஸ்ருதி நிறுவனம், நாதலயா அறக்கட்டளை, நாத இன்பம் அறக்கட்டளை, ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபா மற்றும் கர்நாடிகா இசை காப்பக மையம் ஆகிய தனியார் கலை அமைப்புகளால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு, அரசின் நிதியுதவியாக ரூ.11.75 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**முடிவுரை**

**1.77** தமிழகத்தின் தொன்மையான கலை வடிவங்களையும், தமிழ் பண்பாட்டினையும் புத்துணர்வுடன் மேம்படுத்தும் பணியினை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் கலை பண்பாட்டுத் துறையானது, தமிழர்களின் கலையையும் பண்பாட்டையும் பாதுகாத்து, அதன் தனித்தன்மையினை இழந்து விடாமல் இருக்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்தில், இளைய தலைமுறையினருக்கு இயற்கலை, இசைக்கலை, நாட்டியக் கலை, நாடகக்கலை என்ற நிகழ்த்துக் கலைகளையும், ஓவியம், சிற்பம், பதிப்போவியம் போன்ற நுண்கலைகளில் பயிற்சி அளிக்கவும், திறமைமிக்க கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கவும், நலிவுற்று வரும் கலை வடிவங்களில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்குதல், குறிப்பாக, அழிந்து வரும் கலைகளை ஆவணமாக்குதல் மற்றும் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை இலக்காக்கிக் கொண்டு, அதில் மகத்தான வெற்றியினை பெறும் நோக்கில், கலை பண்பாட்டுத் துறை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**சேவூர் S.இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்